கொள்ளையன் என்கவுன்டரில்

# தலைமறைவு குற்றவாளி கைது



**கடலூர், ஏப்.4:** கடலூர் தொடர் வழிப்பறி கொள்ளையன் என்கவுன்டரை தொடர்ந்து, தலைமறைவாக இருந்த குற்றவாளியை நேற்று தனிப் படை போலீசார் கைது செய்தனர்.

விழுப்புரம்-நாகப்பட்டினம் தேசிய நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு அடுத்தடுத்து கொள்ளையில் ஈடுபட்ட கும்பல் தலைவனான புதுச்சேரி திலாசுபேட்டையைச் சேர்ந்த விஜய் என்ற மொட்டை விஜய் (19), கடலூர் எம்.புதூர் காசநோய் மருத்துவமனை அருகே முந்திரிதோப்பில் பதுங்கி இருப்பதாக தகவல் கிடைத்தது.

இதையடுத்து போலீசார் அங்கு விரைந்து சென்று விஜியை பிடிக்க முயன்றபோது, திடீரென பாய்ந்து வந்து 2 காவலர்களை கத்தியால் வெட்டியுள்ளார். மேலும் ஆய்வாளர் சந்திரனை தாக்க முயன்றபோது தற்காப்புக்காக அவர் சுட்டதில் விஜய் உயிரிழந்தார். போலீசார் தீவிர தேடுதல் வேட்டை நடத்தி கொள்ளை கும்பல் தலைவனின் கூட்டாளிகளான ரேவந்த் குமார் (21), அன்பரசு (20), ரியாஸ் அகமது (22) மற்றும் 17 வயது சிறுவனை கைது செய்தனர். இந்த வழக்கில் தலைமறைவாக உள்ள ஆகாஷ் என்பவரை கைது செய்ய தனிப்படை போலீசார் தீவிரமாக தேடி வந்தனர். இந்நிலையில் கடலூர் அருகே எம்.புதூரில் உள்ள காசநோய் மருத்துவமனை அருகே பதுங்கியிருந்த ஆகாஷை நேற்று மாலை போலீசார் பிடித்து கைது செய்து, கடலூர் மத்திய சிறையில் அடைத்தனர்.

இதனிடையே என்கவுன்டரில் சுட்டு கொல்லப்பட்ட விஜய் உடல், விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், நெய்வேலி மாவட்ட முதன்மை நீதிபதி பிரவீன்குமார் முன்னிலையில் மருத்துவர்கள் குழுவினர் நேற்று இரவு 8 மணியளவில் உடற்கூறு ஆய்வுப்பணி முடிந்து உறவினரான ஜெயந்தியிடம் ஒப்படைக்கப்பட்டது.

திறப்பு விழாவுக்கு தயாராக பாம்பன் பாலம்



▶ ராமேஸ்வரம் அருகே பாம்பன் புதிய ரயில் பாலத்தை திறந்து வைக்க நாளை மறுதினம் (ஏப். 6) பிரதமர் மோடி ராமேஸ்வரம் வருகிறார். இதற்கான முன்னேற்பாடுகளை ஒன்றிய, மாநில பாதுகாப்பு அதிகாரிகள் தீவிரமாக செய்து வருகின்றனர். திறப்பு விழாவுக்கு தயாராக உள்ள பாம்பன் பாலத்தின் எழில் தோற்றம்.

பாஜகவுடன் கூட்டணி அமைப்பதை

# எடப்பாடி ஏற்றுக்கொண்டாலும் தொண்டர்கள் ஏற்கமாட்டார்கள்

## எஸ்.வி.சேகர் பேட்டி

**திருவண்ணாமலை, ஏப்ரல் 4:** திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் நேற்று நடிகர் எஸ்.வி.சேகர் சுவாமி தரிசனம் செய்தார். அப்போது, அவர் கூறுகையில், பாஜக மாநில தலைவர் பதவியிலிருந்து அண்ணாமலையை நீக்குவது நல்லது. பாஜவை அதலபாதாளத்தில் சொருகிவிட்டார்.



டெல்லியின் கட்டாயத்துக்காக பாஜ கூட்டணியை எடப்பாடி பழனிசாமி ஏற்றுக் கொண்டாலும், அதிமுக அடிமட்ட தொண்டர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். திமுக கூட்டணி அடுத்த தேர்தலிலும் வெற்றி பெறுவது நூறு சதவீதம் உறுதி. முழு மெஜாரிட்டியுடன் மீண்டும் மு.க.ஸ்டாலின் முதல்வராக வருவார். பாஜவில் ஒரு முஸ்லிம் எம்பி கூட இல்லாத நிலையில், எப்படி அவர்கள் முஸ்லிம்களுக்கு சாதகமாக செயல்படுவார்கள். திராவிடம் என்பது ஒரு நிலப்பரப்பு. தமிழர்கள் அதை சொல்வதற்கு பெருமைப்படுகிறார்கள். நானும் திராவிடன் தான். தமிழகத்தில் சிறப்பாக ஆட்சி இருக்கிறது என்பதை சொல்ல கூச்சப்பட தேவையில்லை.

அண்ணாமலை வாயை திறந்தாலே பொய்தான் பேசுகிறார். பாஜவில் யாராவது உருப்படாவிட்டால் எப்படியாவது கவர்னராக்கி விடுவார்கள். கழுதை கெட்டால் குட்டிச்சுவரு என்பதைப் போல. ஒரு ஓட்டு கூட வாங்கவில்லையா, கவுன்சிலராக கூட ஜெயிக்கவில்லையா, அப்படி என்றால் அவரை கவர்னர் ஆக்கிவிடலாம் என்பதுதான் பாஜவின் மனோபாவம், என்றார்.

மனைவியுடன் தகாத உறவு

# தங்கை கணவரை கடத்தி கொன்று எரித்த வாலிபர்

**ஓசூர், ஏப்.4:** கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி அருகே சின்னகுத்தி கிராமத்தை சேர்ந்தவர் பச்சியப்பன். இவரது மகன் சக்திவேல் (25). இவர் அதே ஊரை சேர்ந்த வேறு சமுதாயத்தை சேர்ந்த பாப்பம்மா (22) என்பவரை காதலித்து திருமணம் செய்தார். இந்நிலையில் பாப்பம்மாவுக்கும், சக்திவேல் வீட்டினருக்கும் இடையே பிரச்னை ஏற்பட்டதால் அவர் தனது பெற்றோர் வீட்டிற்கு கணவருடன் சென்று விட்டார்.

இந்நிலையில் கடந்த மாதம் 19ம் தேதி சக்திவேல் மாயமானார். பல இடங்களில் தேடியும் கிடைக்காததால் கடந்த 26ம் தேதி சக்திவேல் குடும்பத்தினர் பேரிகை போலீசில் புகார் கொடுத்தனர். இந்நிலையில், கடந்த 30ம் தேதி ஈரோடு மாவட்டம் அந்தியூர் அருகே வனப்பகுதியில் எரிந்த நிலையில் ஒரு ஆண் உடல் கண்டெடுக்கப்பட்டது. இது தொடர்பாக அந்தியூர் போலீசார் விசாரணை நடத்தியதில், அது சக்திவேல் என்பது தெரிய வந்தது. தகவலறிந்து பேரிகை போலீசார் சென்று, கடந்த 19ம் தேதி யாருடன் கடைசியாக சக்திவேல் சென்றார் என

## நண்பருடன் கைது

விசாரணை நடத்தினர். அதில், அவர் கடைசியாக மனைவியின் அண்ணன் வெங்கடேஷ் (32) மற்றும் உறவினர்கள் ராஜேந்திரன் (48), குமார் (22) ஆகியோர் சேர்ந்து மரம் வெட்ட அழைத்துச் சென்றது தெரிய வந்தது. இதையடுத்து வெங்கடேசிடம் போலீசார் விசாரித்தபோது, வனத்துறையினர் துப்பாக்கியால் சுட்டதில் சக்திவேல் மீது குண்டு காயம் பட்டதாகவும், தாங்கள் தப்பி ஓடி வந்து விட்டதாகவும் கூறினர். ஆனாலும் கிடுக்கிப்பிடி விசாரணையில், வெங்கடேஷ் தனது தங்கையின் கணவரை கடத்திச்சென்று வனப்பகுதியில் வெட்டிக் கொலை செய்து, உடலை தீ வைத்து எரித்து நாடகமாடியது தெரிய வந்தது. இதையடுத்து வெங்கடேசையும், ராஜேந்திரனையும் அந்தியூர் போலீசார் கைது செய்தனர்.

விசாரணையில், அவரது மனைவி மங்கம்மா (25) வுடன் சக்திவேல் முறை தவறி உறவு வைத்துள்ளார். இதை கண்டித்தும் தொடர்பை விடவில்லை. இதனால் ஆத்திரம் அடைந்த வெங்கடேஷ், அவரை மரம் வெட்ட ஈரோடு மாவட்டம் அந்தியூர் வனப்பகுதிக்கு அழைத்துச் சென்று கொலை செய்து, உடலை தீ வைத்து எரித்துவிட்டு நாடகமாடியது தெரிய வந்துள்ளது.


**தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகம்**
TNGECL
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு**

| ஒப்பந்த விவரக்குறிப்பீடு எண். | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | பணியின் விவரம் |
|---|---|---|
| No.001/TNGECL/CIAO/ Internal Audit / FY 2025-26 & FY 2026-27 | தலைமை அகநிலை தணிக்கை அலுவலர் | 2025-26 மற்றும் 2026-27 நிதியாண்டுக்கான பட்டயக் கணக்காளர் நிறுவனங்களிடமிருந்து TNGECL இல் திறந்த டெண்டர் மூலம் உள் தணிக்கையாளர் நியமனம். |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / திறக்கப்படும் கடைசிநாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழுவிவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tntenders.gov.in/nicgep/app, www.tenders.tn.gov.in
செ.ம.தொ.இ/1337/ஒப்பந்தப்புள்ளி/2025



**Kancheepuram City Municipal Corporation**
**Calling of Expression of Interest**

As per the Honurable High Court of Madras Orders, It is very essential to remove Fulifora Proposis in the Water Bodies, therefore Kancheepuram Corporation calling expression of interest from the NGO's / Individual whomsoever experienced and interested shall apply for removal of Fuliflora Proposis with their own cost in the waterbodies such as Allabath Lake, Chinnayankulam Lake etc., The applications is expected within a 7 days from the date of this notification.

Date: 02.04.2025 // Place: Kancheepuram
வெ.ஆ.எண்.022/செ.ம.தொ.அ/2025, காஞ்சி, 03.04.25
Commissioner
Kancheepuram City Municipal Corporation



**டெண்டர் Ref. எண் HIL/BTI/BIO/2/2024-25 தேதி: 13.03.2025**

பின்வரும் இனத்துக்காக இணையவழி டெண்டர் https://hil.abcprocure.com/EPROC வலைதளம் & CPP இணையமுகப்பு மூலம் வரவேற்கப்படுகிறது.

| வ.எண் | விவரம் | முன்வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | “பேசிலஸ் துரிஞ்சியன்சிஸ் வர். இஸ்ரேலியன்சிஸ் (Bti)” அடிப்படையிலான பயோ–லார்விசைடு ஆலைக்கான வடிவமைப்பு, உற்பத்தி/தயாரிப்பு, வழங்கல், நிறுவல், செயல்படுத்தல், சோதனை மற்றும் பரிசோதனை இயக்கம்” LSTK (நிதியாண்டு 2024–25), நிகழ்வு அடையாள எண்: 57753<br>விவரங்களுக்கு எங்கள் www.hil.gov.in வலைதளத்தை பார்வையிடவும். | ரூ.20,00,000/– |

CBC 02101/11/0001/2526



தமிழ்நாடு அரசு
**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், காஞ்சிபுரம் மண்டலம்
ந.க.எண்.1342/2024 பேரூ2 நாள்–02.04.2025
**மின்னணு ஒப்பந்தபுள்ளி அழைப்பு**

1. 2024–2025ம் ஆண்டிற்கு மூலதன மானிய நிதியின் கீழ், காஞ்சிபுரம் மண்டலம், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள 4 பேரூராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளை மேற்கொள்ள மின்கல வாகனம் (Supply and Delivery of 6 Nos of Battery Operated vehicles (Three Wheeler) with Lithium battery for Kancheepuram District (Uthiramerur-1, Walajabad-2) and Chenglepet District (Karunguzhi-1, Tirukalukundram-2) மற்றும் காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள 2 பேரூராட்சிகளில் இலகுரக வாகனம் (Supply and Delivery of (2 Nos) Light Commercial Vehicle at RR Park in Kancheepuram District (Uthiramerur-1 ) and Chengalpattu District (Karunguzhi-1) வாங்குவதற்கு தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகிறது.
2. வேலையின் மதிப்பு மின்கல வாகனம் ரூ.15.18 இலட்சம் மற்றும் இலகுரக வாகனம் ரூ.16.70 இலட்சம் ஆக மொத்தம் ரூ.31.88/– இலட்சம் (ரூபாய் முப்பத்து ஒன்று இலட்சத்து எண்பத்து எட்டாயிரம் மட்டும்).
3. ஒப்பந்தப்புள்ளி விபரங்களை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் பார்வையிட்டு அறிந்து கொள்ளலாம்.
4. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை 02.04.2025 முதல் காலை 10.00 மணி முதல் www.tntenders.gov.in என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
5. ஒப்பந்தப்புள்ளி தொடர்பான முன் கலந்தாய்வு கூட்டம் (Pre-bid meeeting) பேரூராட்சிகள் உதவி இயக்குநர், காஞ்சிபுரம் மண்டலம், மாவட்ட ஆட்சியரக வளாகம், காஞ்சிபுரம் அலுவலகத்தில் வைத்து 16.04.2025ஆம் தேதி காலை 11.00 மணிக்கு நடைபெறும்.
6. ஒப்பந்தப்புள்ளி ஆவணம் பதிவேற்றம் செய்வதற்கான கடைசி தேதி மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட டெண்டர் ஆவணத்தை பதிவேற்றம் / சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி 23.04.2025 அன்று மாலை 3.00 மணி வரை ஆகும்.
7. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் 23.04.2025 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும்.

பணியின் விபரம், மதிப்பீட்டு தொகை மற்றும் டேவணித் தொகை, ஒப்பந்ததாரருக்கான தகுதி உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்
காஞ்சிபுரம் மண்டலம்
வெ.ஆ.எண்.021/செ.ம.தொ.அ/2025, காஞ்சி, 03.04.25


# பண்ருட்டி பலா உள்பட மேலும் 6 பொருளுக்கு புவிசார் குறியீடு



**சென்னை, ஏப். 4:** கும்பகோணம் வெற்றிலை, கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை மாணிக்கமாலைக்கு புவிசார் குறியீடு சமீபத்தில் கிடைத்தது. இந்நிலையில் பண்ருட்டி பலாப்பழம், பண்ருட்டி முந்திரி, புளியங்குடி எலுமிச்சை, விருதுநகர் சம்பா வத்தல், செட்டிகுளம் சின்ன வெங்காயம் மற்றும் ராமநாதபுரம் சித்திரைகார் அரிசி ஆகிய 6 பொருட்களுக்கு புவிசார் குறியீடு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டில் புவிசார் குறியீடு பெற்ற பொருட்களின் எண்ணிக்கை 69 ஆக உயர்ந்துள்ளது.

பண்ருட்டி பலாப்பழம் சுவையில் எப்போதும் சோடை போகாது. மலைப் பிரதேசத்தில் கிடைக்கும் தேன் பலாக்களைப் போன்ற சுவை பண்ருட்டி பலாவில் இருக்கிறது என்கிறார்கள் அப்பகுதி மக்கள். தமிழகத்தின் ‘லெமன் சிட்டி’ என்று தென்காசி மாவட்டம், புளியங்குடி அழைக்கப்படுகிறது. அந்த அளவுக்கு எலுமிச்சை உற்பத்தி இங்கு மிகவும் பிரபலமாக உள்ளது. அதேபோல, புவிசார் குறியீடு பெற்றதன் மூலம் பண்ருட்டி முந்திரி வணிகம் மேம்படவும், அயல்நாடுகளுக்கான ஏற்றுமதி அதிகரிக்கவும் நல்லதொரு வாய்ப்பாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. “சித்திரைக் கார் என்பது ராமநாதபுரம் மாவட்டத்தின் பாரம்பரிய நெல் ரகம். இப்பகுதியில் சிவப்பு மட்டை, நொருங்கன் என்றும் இதனை அழைப்பர். இந்த நெல் ரகத்தில் கிடைக்கும் அரிசி அதிக நேரம் பசியை தாங்கக்கூடியது, அதிக ஊட்டச்சத்து உடையது, நோய் எதிர்ப்பு திறன் அதிகமாக உள்ளது” என்று கூறப்படுகிறது.


GOVERNMENT OF TAMIL NADU
**RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ DEPARTMENT**
**Expression of Interest for the appointment of Ombudsperson under MGNREGS**

1. **For full details visit www.tn.gov.in & www.tnrd.gov.in**
2. Expression of Interest is sought from persons having eminent standing and impeccable integrity with at least ten years of experience in public administration, law, academics, social work or management.
3. Experience in working with people or community organization shall be mandatory qualification.
4. The appointment is for tenure of 2 years extendable not more than twice by one year each based on performance appraisal or till the incumbent attains the age of 68 years whichever is earlier.
5. Should serve as Ombudsperson for a district.
6. No remuneration except sitting fee, in the form of a fee, of Rs.2250/- per sitting with maximum upper limit of Rs.45,000/- per month is allowed.
7. The application form along with terms and condition can be downloaded free of cost from **www.tn.gov.in** & **www.tnrd.gov.in**
8. **Last date** for submission of application to the Commissioner of Rural Development & Panchayat Raj, Chennai- 600015 is **05.05.2025**

Commissioner
Rural Development and Panchayat Raj
DIPR/ 1333 /TENDER/2025



**TAMIL NADU MARITIME BOARD**
**(Government of Tamil Nadu)**
Tender No. 052/S1/2025 Dated 04.04.2025
**Design, Construction and Delivery of Three Passenger Ferries (Capacity of 150 + 6 each) for Tamil Nadu Maritime Board**

Tamil Nadu Maritime Board invites Request for Proposal (RFP) for Design, Construction and Delivery of Three Passenger Ferries (Capacity of 150 + 6 each). The schedule of important dates are as follows:

| | |
|---|---|
| Date of Issue of RFP Documents | 07.04.2025 |
| Date of Pre-Bid Meeting | 15.04.2025 @3.00 PM |
| Last Date of Bid submission | 05.05.2025 upto 3.00 PM |
| Opening of Bids | 06.05.2025 @ 11.30 AM |

For detailed Request for Proposal, please visit:
https://tntenders.gov.in/nicgep/app

Sd/- Principal Secretary / Vice Chairman and Chief Executive Officer
DIPR.1341/Tender/2025



என்றும் உங்கள் நினைவில்



பேராசிரியர். **இரா.வை. தனபாலன்,** M.L.,
நிறுவனர்
5.7.1941 - 4.4.2021
**சென்ட்ரல் சட்டக் கல்லூரி,** சேலம்
**பேராசிரியர் தனபாலன் அறிவியல் & மேலாண்மை கல்லூரி**
கேளம்பாக்கம், சென்னை
குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், நிர்வாகம்,
அலுவலர்கள், முன்னாள் மற்றும் இந்நாள் மாணவர்கள்



**சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்**
CUB TRUST AND EXCELLENCE SINCE 1904
**கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை**
**நிர்வாக அலுவலகம் :** எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612001. **மின்னஞ்சல்:** crmd@cityunionbank.in, **போன்:** 0435-2432322, **ஃபேக்ஸ்:** 0435-2431746

**கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் / நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-ன் படி டெண்டருடன் கூடிய மறு ஏல விற்பனை அறிவிப்பு**

சிட்டி யூனியன் வங்கியின் கடன்காரர்கள் / ஜாமீன்தாரர்களாகிய **1.திரு.V. கிருஷ்ணகுமார், த/பெ.லேட்.விஸ்வநாதன், எண்.5 / 3 7 9 - 6 ( 3 ), பசும்பொன் முத்துராமலிங்கம் தெரு, பாடியநல்லூர், திருவள்ளூர் - 600052. 2.திரு.V.தில்லி பாபு, த/பெ.லேட்.விஸ்வநாதன், எண். 5/379-6(3), பசும்பொன் முத்துராமலிங்கம் தெரு, பாடியநல்லூர், திருவள்ளூர் - 600052. 3.திருமதி.V . விஜயலெஷ்மி, க/பெ.லேட். விஸ்வநாதன், எண்.5 / 3 7 9 - 6 ( 3 ), பசும்பொன் முத்துராமலிங்கம் தெரு, பாடியநல்லூர், திருவள்ளூர் - 600052. 4.திருமதி.A.சங்கீத ப்ரியா, க/பெ.V . கிருஷ்ணகுமார், எண்.5 / 3 7 9 - 6 ( 3 ), பசும்பொன் முத்துராமலிங்கம் தெரு, பாடியநல்லூர், திருவள்ளூர் - 600052** ஆகியோர் பெற்ற கடன் நிலுவை தொகை **28.03.2025** அன்றுள்ளபடி **ரூபாய்.44,57,225/- (ரூபாய் நாற்பத்து நான்கு லட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து இருநூற்று இருபத்து ஐந்து மட்டும்)** மற்றும் **29.03.2025** முதல் பின்வட்டி இதர செலவுகள் ஆகிய மொத்த தொகையை வசூலிக்கும் பொருட்டு வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை 2002 ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம் விதி 8(6) 9 இன் கீழ் சிட்டி யூனியன் வங்கியின் அதிகாரப்பூர்வ அதிகாரி அவர்களால் சீலிடப்பட்ட டெண்டருடன் கூடிய ஏல விற்பனை அடிப்படையில் விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**வங்கிக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்து**
**V.விஜயலெஷ்மி, V.தில்லி பாபு & V.கிருஷ்ண குமார் ஆகியோர்களுக்கு சொந்தமான சொத்து**

வட சென்னை பதிவு மாவட்டம், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுக்கா, செங்குன்றம் சார் பதிவு மாவட்டம், எண்.8, பாடியநல்லூர் கிராமம், பழைய சர்வே எண்.120/2, பட்டா எண்.6379 படி புதிய சர்வே எண்.120/8, மனை எண்.7-ல் 2400 சதுரடி பரப்பளவு இடம், தற்போதய வீடு மற்றும் மின் இணைப்பு வசதி முதலியன. **இதன் நான்கு எல்லைகள் : வடக்கில்** - ரோடு, **தெற்கில்** - மனை எண்.19, **கிழக்கில்** - மனை எண்.8, **மேற்கில்** - மனை எண்.6. **அளவீடு :** கீழ்மேல் வடபுறம் 40 அடி, தென்புறம் 40 அடி, தென்வடல் கீழ்புறம் 60 அடி, மேல்புறம் 60 அடி ஆக மொத்தம் 2400 சதுரடி இடம், தற்போதய வீடு மற்றும் மின் இணைப்பு வசதி முதலியன.

**நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.80,00,000/- (ரூபாய் எண்பது லட்சம் மட்டும்)**

| டெண்டருடன் கூடிய மறு ஏல விற்பனை விபரம் | |
|---|---|
| **மறு ஏல தேதி** | **ஏலம் நடைபெறும் இடம்** |
| **28.04.2025** | **சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், செங்குன்றம் கிளை**<br>**எண்.121/4, நேரு தெரு, MA நகர், பாடியநல்லூர்**<br>**செங்குன்றம், சென்னை, திருவள்ளூர் - 600052**<br>**தொலைபேசி எண் : 044-26311771 செல் எண்: 9344023567** |

**டெண்டருடன் கூடிய மறு ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:**

**(1)** விருப்பமுடைய டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர், ஏலத்தில் பங்கு கொள்ள நேரில் ஆஜராக வேண்டும் மற்றும் தனக்காக ஏலம் கேட்பதாக எழுத்துப்பூர்வமான ஒரு உறுதிமொழியையும் அளிக்க வேண்டும். **(2)** விருப்பம் உடைய டெண்டர்தாரர் / ஏலம் கேட்க விரும்புவோர், டெண்டர் படிவங்களை **மேனேஜர், சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், செங்குன்றம் கிளை எண்.121/4, நேரு தெரு, MA நகர், பாடியநல்லூர், செங்குன்றம், சென்னை, திருவள்ளூர் - 600052** விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம். **(3)** விருப்பமுடைய டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் தங்களது விலை புள்ளிகளை நிர்ணயிக்கப்பட்ட டெண்டர் படிவத்தில் சீலிடப்பட்ட உறைகளில் வைத்து, அத்துடன், **சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்** என்கின்ற பெயரில் பெறப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச விலையின் 10% தொகைக்கான **Pay Order / கேட்பு வரைவோலையினை** பிணைவைப்புத் தொகையாக இணைத்து “**அதிகாரப்பூர்வ அதிகாரி, சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்**” என முகவரியிட்டு, இங்கு அறிவிக்கப்பட்டுள்ள டெண்டருடன் கூடிய மறு ஏல விற்பனை தேதியன்று **மதியம் 12:00 மணி** அல்லது அதற்கு முன்னதாக சமர்ப்பிக்க வேண்டும். **( 4 )** விருப்பமுள்ள டெண்டர்தாரர் ஏலம் கேட்பவர் சொத்துக்களை பார்வையிடவும் மற்றும் இதர விபரங்களுக்கும் **தொலைபேசி எண் : 044-26311771 செல் எண்: 9344023567 - ஐ தொடர்பு கொள்ளவும். (5)** இந்த சொத்து(க்கள்) “இருக்கின்ற இடத்தில்”, “இருக்கின்ற நிலையில்” மற்றும் “இருக்கின்ற வட்டுடன்” என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். **(6)** சீலிடப்பட்ட டெண்டர்கள் விருப்பமுள்ள ஆஜராகியுள்ள டெண்டர்தாரர்கள் முன்னிலையில் இங்கு அறிவிக்கப்பட்டுள்ள டெண்டருடன் கூடிய மறு ஏல விற்பனை தேதி அன்று **மதியம் 01.00 மணிக்கு** திறக்கப்படும். பொதுவாக மூடப்பட்ட நிலையிலான டெண்டர் விற்பனையாக இருந்தபோதிலும், மூடப்பட்ட நிலையிலான டெண்டரில் குறிப்பிடப்பட்டுள்ள விலைப்புள்ளியைக் காட்டிலும் கூடுதலாக ஏலம் கோர விரும்புவோர்களின் விருப்பத்தின் பேரில் அதிகாரபூர்வ அதிகாரியின் கட்டளையின் பேரில் வெளிப்படையான திறந்த ஏலத்தினை நடத்திடலாம். இந்த நிலையில் அதிக பட்சம் ஏலம் கேட்பவருக்கு, இந்த விற்பனை வழங்கப்படும் எனினும் இந்த விற்பனை சிட்டி யூனியன் வங்கியினால் உறுதி செய்யப்பட வேண்டும். **(7)** வெற்றி பெறும் டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் விற்பனை நிலையில் **25%** தொகையை **(பிணை வைப்புத்தொகை செலுத்தியது உள்பட)** விற்பனை **உறுதி செய்யப்பட்ட உடனேயே** செலுத்த வேண்டும். மீதி **7 5 %** தொகையை விற்பனை உறுதி செய்யப்பட்ட நாளிலிருந்து **1 5** நாட்களுக்குள்ளாக செலுத்த வேண்டும். மேற்குறிப்பிட்டபடி செலுத்த தவறினால் அவரால் செலுத்தப்பட்ட **25%** தொகை முழுவதும் அவர் இழக்க நேரிடும். **(8)** குறிப்பிடப்பட்டுள்ள கால வரையறைக்குள் மொத்த விற்பனை தொகையும் பெற்றுக் கொண்ட பின்னரே, வெற்றி பெற்ற டெண்டர்தாரர் / ஏலதாரருக்கு அதிகாரபூர்வ அதிகாரியால் விற்பனை சான்றிதழ் (Sales Certificate) வழங்கப்படும். **(9)** பத்திரச் செலவு , பதிவு கட்டணம், சட்டப்படியான மற்ற செலவுகளையும் வெற்றிபெற்ற ஏலம் கேட்பவரே ஏற்கவேண்டும். **(10)** அரசு, அரசு நிறுவனம் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கான சொத்து சம்பந்தப்பட்ட சட்ட பூர்வ வீட்டு வரி, மின்சார கட்டணம் மற்றும் TDS, GST மற்றும் இதர பாக்கிகளை வெற்றிபெறும் ஏலம் கேட்பவரே செலுத்த வேண்டும். **(11)** எந்த வித காரணமும் கூறாமல் விலைப்புள்ளிகளை ஏற்க அல்லது நிராகரிக்க அல்லது விற்பனையை ரத்து செய்ய அதிகாரபூர்வ அதிகாரிக்கு முழு உரிமை உண்டு.

**இடம் : கும்பகோணம், தேதி : 03.04.2025** **அதிகாரப்பூர்வ அதிகாரி**

**பதிவு அலுவலகம் :** எண்.149, T.S.R. (பெரிய) தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு - 612001, **CIN :** L65110TN1904PLC001287, **போன்:** 0435 - 2402322, **ஃபேக்ஸ் :** 0435 - 2431746, **இணையதளம் :** www.cityunionbank.com


# மாணவர்களுக்கு பாலியல் தொல்லை விடுதி வார்டன் உள்பட 2 பேர் கைது

**லால்குடி, ஏப்.4:** திருச்சி மாவட்டம் சமயபுரம் அடுத்த புறத்தாக்குடியில் அரசு உதவிபெறும் தனியார் மேல்நிலைப்பள்ளி உள்ளது. இதன் அருகே மாணவர்கள் விடுதியும் உள்ளது. இதில், 110 மாணவர்கள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர். வார்டனாக கும்பகோணம், அய்யாவாடியை சேர்ந்த பாதிரியார் குழந்தைநாதன் (48) வார்டனாக உள்ளார். இவரது நண்பர், அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் சுந்தர்ராஜன் (40), பாதிரியாருக்கான படிப்பை திருச்சி தனியார் கல்லூரியில் படித்து வருகிறார்.

விடுமுறை நாட்களில் விடுதிக்கு வந்த சுந்தர்ராஜன், மாணவர்களுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக கூறப்படுகிறது. இது பற்றிய புகாரின்படி லால்குடி அனைத்து மகளிர் போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிந்து சுந்தர்ராஜன், அவருக்கு உடந்தையாக இருந்த வார்டன் குழந்தைநாதன் ஆகியோரை கைது செய்தனர்.


**ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்சன் பிரைவேட் லிட்.**
OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD.
**CIN : U67100TZ2014PTC020363**
**கார்ப்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47ஆவது தளம், N.C. கெல்கர் மார்க், R.G. கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை - 400028.**
**மின்னஞ்சல்: vm.divakaran@omkaraarc.com**
**அதிகாரப்பூர்வ அலுவலர் கைப்பேசி எண்: +91 93446 84194 / 98840 62068 / 99623 33307**

[பிற்சேர்க்கை - IV-A]
[பார்க்க விதி - 8(6) & 9(1)]
**அசையாச் சொத்தின் மின் ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு**

**கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (“சர்ஃபாசி சட்டம்”) அதனுடன் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) & 9(1) ஆகியவற்றின் கீழ் அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல அறிவிப்பு**

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) & அடமானதாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில் ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளதும் ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்சன் பிரைவேட் லிட். (OARPL) நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தினை மின் ஏல முறையில் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்சன் பிரைவேட் லிமிடெட் (OARPL) (ஓம்காரா PS 22/2020–21 டிரஸ்ட்டின் டிரஸ்ட்டியாகச் செயல்படும் முறையில்) நிறுவனமானது கீழ்க்காணும் கணக்குகள் தொடர்பான அனைத்து நிலுவைத் தொகைகளையும் 26.02.2021 நாளிட்ட ஒப்படைப்பு ஒப்பந்தத்தின்படி ஃபுல்லர்டன் இந்தியா ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திடமிருந்து (ஒப்படைப்பு நிறுவனம்) தொடர்புடைய கடனீட்டுச் சொத்துக்களுடன் சேர்த்துத் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது. அதற்கிணங்க OARPL நிறுவனமானது ஒப்படைப்பு நிறுவனத்தின் சார்பாகக் களமிறங்கிக் கடன்களைத் திரும்பப் பெறவும் கடனீட்டுச் சொத்து மீது அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் அதிகாரம் பெற்றுள்ளது. இந்நிலையில் OARPL நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர் கடன்களைத் திரும்பப் பெறும் பொருட்டுக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துக்களை விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளார். இந்தச் சொத்துக்கள் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும் உபக் கடன்தாரர்(கள்) ஆகியோரிடமிருந்து ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனம் எனும் முறையில் OARPL நிறுவனத்துக்கு வர வேண்டியுள்ளதும் கீழே தொடர்புடைய பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதுமான தொகையைத் திரும்பப் பெறும் வகையில் சர்ஃபாசி சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) ஆகியவற்றின் கீழான உரிமைகள் மற்றும் அதிகாரங்களின்படி **“உள்ளது உள்ள இடத்தில்”, “உள்ளது உள்ளபடி”, “உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்”, “திரும்பப் பெறப்பட மாட்டாது” எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.** கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்), கடனீட்டுச் சொத்துக்கள், நிலுவைத் தொகைகள், பிரிவு 13(2)–இன் கீழான கோரிக்கை அறிவிப்பின் தேதி, சுவாதீன தேதி, நிர்ணய விலை, ஏல உயர்வுத் தொகை, முன்வைப்புத்தொகை (EMD), ஆய்வு தேதி மற்றும் நேரம் ஆகியவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | கடன்தாரர் மற்றும் உப கடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் / சர்ஃபாசி சட்டம் பிரிவு 13(2)–இன்கீழான கோரிக்கை அறிவிப்பு தேதி / நேரடி சுவாதீன தேதி | சொத்தின் உரிமையாளர் | சொத்து விவரம் | சொத்தின் வகை | 31.03.2025 தேதிப்படி நிலுவைத்தொகை | நிர்ணய விலை / ஏல உயர்வுத் தொகை | முன்வைப்புத் தொகை (EMD) (நிர்ணய விலையில் 10%) | சொத்து ஆய்வு தேதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| தொகுப்பு 1 | திரு. M.R. ராஜாராம் / திருமதி பிரியா.R மற்றும் M/s. அண்ணாமலை நெட்வொர்க்ஸ் அண்டு டெலிசிஸ்டம்ஸ்<br>13(2) அறிவிப்பு தேதி : 14.02.2020<br>நேரடி சுவாதீன தேதி 30.09.2024 | திரு. M.R. ராஜாராம் | **அட்டவணை A:** அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட நிலம் மற்றும் கட்டடம். மனை எண் 25, பரப்பளவு 2222 சதுர அடி, “கார்த்திக் நகர் விரிவு 1” என அறியப்படும் ஒப்புதல்பெற்ற லேஅவுட்டில் அடங்கியது (ஒப்புதல்பெற்ற எண் DTCP 179/2002), திட்ட அனுமதி எண் 45/2013, சர்வே எண்கள் 82/2A & 82/2B. அமைவிடம் புதிய எண் 169, மாதம்பாக்கம் கிராமம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம். இது தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது. எல்லைகள்: வடக்கு: மனை எண் 24; தெற்கு: மனை எண் 26; கிழக்கு: காலி நிலம்; மேற்கு: 23 அடி லேஅவுட் சாலை. அளவீடுகள்: கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் 63 அடி, கிழக்கு மேற்காகத் தெற்குப் பக்கம் 64 அடி, வடக்குத் தெற்காகக் கிழக்குப் பக்கம் 35 அடி, வடக்குத் தெற்காக மேற்குப் பக்கம் 35 அடி. அனைத்தும் சேர்த்து மொத்தப் பரப்பளவு ஏறக்குறைய 2222 சதுர அடி. இது தென் சென்னை பதிவு மாவட்டம், கூடுவாஞ்சேரி துணை மாவட்டத்துக்கு உட்பட்டது.<br>**அட்டவணை B:** அட்டவணை A–இல் குறிப்பிட்டுள்ள சொத்தில் அடங்கிய நிலத்தின் பிரிபடாப்பங்கு 294 சதுர அடி, அட்டவணை A–இல் குறிப்பிட்டுள்ள சொத்தின் இரண்டாவது தளத்தில் உள்ள அடுக்கக எண் S–1, அடித்தளப் பரப்பு 712 சதுர அடி மற்றும் பொதுப் பகுதி சேர்த்து. | அடுக்குமாடிக் குடியிருப்பு | ரூ.45,01,195/– (ரூபாய் நாற்பத்தைந்து லட்சத்து ஆயிரத்து நூற்று தொண்ணூற்று ஐந்து மட்டும்) | ரூ.23,50,000/– (ரூபாய் இருபத்து மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)<br>ஏல உயர்வுத் தொகை: ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) | ரூ.2,35,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து முப்பத்தைந் தாயிரம் மட்டும்) | மேலே குறிப்பிட்டுள்ள கைப்பேசி எண்கள் மூலமாக அதிகாரப்பூர்வ அலுவலரிடம் முன் அனுமதி பெற்று. |
| தொகுப்பு 2 | திரு. M.R. ராஜாராம் / திருமதி பிரியா. R மற்றும் M/s. அண்ணாமலை நெட்வொர்க்ஸ் அண்டு டெலிசிஸ்டம்ஸ்<br>13(2) அறிவிப்பு தேதி : 14.02.2020<br>நேரடி சுவாதீன தேதி 09.10.2024 | திரு. M.R. ராஜாராம் | **அட்டவணை A:** அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட நிலம் மற்றும் கட்டடம். மனை எண் 25, பரப்பளவு 2222 சதுர அடி, “கார்த்திக் நகர் விரிவு 1” என அறியப்படும் ஒப்புதல்பெற்ற லேஅவுட்டில் அடங்கியது (ஒப்புதல் எண் DTCP 179/2002), திட்ட அனுமதி எண் 45/2013, சர்வே எண்கள் 82/2A & 82/2B. அமைவிடம் புதிய எண் 169, மாதம்பாக்கம் கிராமம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம். இது தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது. எல்லைகள்: வடக்கு: மனை எண் 24; தெற்கு: மனை எண் 26; கிழக்கு: காலி நிலம்; மேற்கு: 23 அடி லேஅவுட் சாலை.<br>**அளவீடுகள்:** கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் 63 அடி, கிழக்கு மேற்காகத் தெற்குப் பக்கம் 64 அடி, வடக்குத் தெற்காகக் கிழக்குப் பக்கம் 35 அடி, வடக்குத் தெற்காக மேற்குப் பக்கம் 35 அடி. அனைத்தும் சேர்த்து மொத்தப் பரப்பளவு ஏறக்குறைய 2222 சதுர அடி. இது தென் சென்னை பதிவு மாவட்டம், கூடுவாஞ்சேரி துணை மாவட்டத்துக்கு உட்பட்டது.<br>**அட்டவணை B:** அட்டவணை A–இல் குறிப்பிட்டுள்ள சொத்தில் அடங்கிய நிலத்தின் பிரிபடாப்பங்கு 315 சதுர அடி, அட்டவணை A–இல் குறிப்பிட்டுள்ள சொத்தின் இரண்டாவது தளத்தில் உள்ள **ப்ளாட் எண் S–2**, அடித்தளப் பரப்பு 761 சதுர அடி மற்றும் பொதுப் பகுதி சேர்த்து. | அடுக்குமாடிக் குடியிருப்பு | ரூ.46,06,017/– (ரூபாய் நாற்பத்தாறு லட்சத்து ஆறாயிரத்து பதினேழு மட்டும்) | ரூ.25,50,000/– (ரூபாய் இருபத்தைந்து லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)<br>ஏல உயர்வுத் தொகை: ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) | ரூ.2,55,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பத்தைந் தாயிரம் மட்டும்) | மேலே குறிப்பிட்டுள்ள கைப்பேசி எண்கள் மூலமாக அதிகாரப்பூர்வ அலுவலரிடம் முன் அனுமதி பெற்று. |

**கணக்கு எண் 344905000929, பயனாளர் பெயர்: ஓம்காரா PS 22/2020–21 டிரஸ்ட், வங்கியின் பெயர்: ICICI வங்கி, கிளை: பாந்த்ரா (கிழக்கு), மும்பை, IFSC குறியீடு: ICIC0003449.**
**மின் ஏல தேதி மற்றும் நேரம்: தொகுப்பு 1 – 24ஆம் தேதி ஏப்ரல் 2025 (வியாழக்கிழமை) அன்று முற்பகல் 11:00 மணி முதல் நண்பகல் 12:00 மணி வரை**
**தொகுப்பு 2 – 24ஆம் தேதி ஏப்ரல் 2025 (வியாழக்கிழமை) அன்று முற்பகல் 11:00 மணி முதல் நண்பகல் 12:00 மணி வரை**

**ஏலத்தில் கலந்து கொள்வதற்கான ஏலப்புள்ளிக் கடிதம் / வாடிக்கையாளர் விவர (KYC) ஆவணம் / முன்வைப்புத்தொகைச் (EMD) சான்று ஆகியவற்றை சமர்ப்பிக்க கடைசி தேதி மற்றும் நேரம்: 22ஆம் தேதி ஏப்ரல் 2025 அன்று மாலை 04:00 மணிக்குள்.**

**ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:** விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய ஈடு பெற்றுக் கடனளித்த (OARPL) நிறுவனத்தின் http://omkaraarc.com/auction.php எனும் இணையத்தளத்தில் அல்லது சேவை வழங்குநரின் i.e https://www.bankeauctions.com எனும் இணையத்தளத்தில் அளிக்கப்பட்டுள்ள இணைப்பைக் காண்க.

**கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) & 9(1) ஆகியவற்றின் கீழான சட்டப்படியான விற்பனை அறிவிப்பு**

இந்த அறிவிப்பு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002–இன் கீழும் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) அதனுடன் 9(1) ஆகியவற்றின்படியும் மேற்குறிப்பிட்ட கடன் கணக்கின் கடன்தாரர்களுக்கு மேற்கண்ட தேதியிலும் நேரத்திலும் மின் ஏல முறையிலான ஏலம் / விற்பனை நடைபெற உள்ளது பற்றியும் விரும்பினால் மேலே கூறியபடி நிலுவைத் தொகைகளை 01.04.2025 வரையான மேல்வட்டி மற்றும் அனைத்துச் செலவினங்கள், கட்டணங்கள், செலவுகள் ஆகியவற்றுடன் விற்பனை முடிவதற்கு முன் எந்த நேரத்திலும் செலுத்திச் சொத்துக்களை மீட்டுக் கொள்ளும்படியும் அறிவுறுத்தும் 15 (பதினைந்து) தேதிக்குக் குறையாத இன்றியமையா அறிவிப்பும் ஆகும். தொகையைச் செலுத்தத் தவறினால், சொத்தானது அதிகாரப்பூர்வ அலுவலரின் / ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தின் விருப்புரிமைக்கேற்ப கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(5)–இன் பரிந்துரைக்கப்பட்டுள்ள எந்த முறையின்படியும் விற்பனை செய்யப்படும்.

தேதி: 04.04.2025
இடம்: சென்னை

(V M திவாகரன்)
கைப்பேசி எண்: 99623 333307
அதிகாரப்பூர்வ அலுவலர்
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்சன் பிரைவேட் லிட்.
(ஓம்காரா PS 22/2020–21 டிரஸ்ட்டின் டிரஸ்ட்டி எனும் முறையில்)